கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 02.09.2024 அ.வ.எண். 736/2010 வா.சா.1 சந்திரன், த/பெ, நாச்சிமுத்து

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் சுயார்ஜிதமாக சம்பாதித்து சொத்து ஏதேனும் வாங்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை. கூட்டாக சொத்து வாங்கியதாக நான் எனது பிராதில் கூறியுள்ள நிலையில் எனக்கு நிதி ஆதாரம் இருந்ததை நிரூபிக்க ஆவணங்களை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்னுடைய பிராதிலும் நிதி ஆதாரங்கள் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 1951 ஆம் ஆண்டில் படித்து முடித்துவிட்டு வெளியூரில் வேலை பார்த்து வந்தேன் என்றால் இல்லை. உள்ளூரிலேயே தொழில் செய்துவந்தேன். கிருஷ்ணசாமி அருணாசல கவுண்டரிடம் கிரயம் பேசியது எந்த ஆண்டு என்றால் குறிப்பாக தெரியாது ஆனால் அவர்கள் பேசயி விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்தை கிருஷ்ணசாமி எதற்காக வாங்கினார் என்று தெரியுமா என்றால் தொழில் விருத்தி செய்வதற்காக ஐந்து பேர் சேர்ந்து வாங்கினோம். தாவா சொத்தானது கிரயம் பெற்ற அன்று ஒரு சென்ட் என்ன விலை போனது என்றால் 1 செண்ட் ரூ.500 ஆகும்.

அன்றைய தினத்திலேயே கிருஷ்ணசாமி ரூ.1000 க்கு 1 செண்ட் விலை கிரயம் பேசினார் என்றால் சரியல்ல. கிரய ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்திற்கு எழுத்தருக்கு கிருஷ்ணசாமி தான் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் செலவு செய்திருந்தால் தொகையை குறிப்பிட்டு நான் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீ தண்டாயுபாணி ரைஸ் மற்றும் ஆயில் மில்லை நாச்சிமுத்து கவுண்டர் கிருஷ்ணசாமி கவுண்டருக்கு உயில் ஏற்படுத்தி வைத்தார் என்றால் இல்லை. மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் 1979 ஆம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆன கிருஷ்ணசாமி கவுண்டர் அவருடைய சுய சம்பாதியத்தில் வந்த வருமானத்தை வைத்துதான் தாவா சொத்தை விலைக்கு வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணசாமி கவுண்டர் 1985 ஆம் ஆண்டு அவருடைய சொந்த உழைப்பில் தாவா சொத்தை அன்றைய காலகட்டத்தில் சுமார்

ரூ.2,00,000/- க்கு மாடர்ன் ரைஸ் மில்லாக கட்டினார் என்றால் சரியல்ல. ரைஸ்மில்லில் இருந்து வந்த பொது வருமானத்தை வைத்துதான் மேற்படி மாடர்ன் ரைஸ் மில் கட்டப்பட்டது. தேகானி என்ற கிராமத்தில் எனது தகப்பனார் ஆன கிருஷ்ணசாமி கிரஸ்சர் ஓட்டி அதில் வந்த வருமானத்தை மாடர்ன் ரைஸ்மில்லில் முதலீடு செய்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளை வாங்குவதற்கு வாதிகளாகிய நாங்கள் எவ்வித நிதிஆதாரமும் மற்றும் எங்களுடைய தொழில்நுட்ப யுக்தியும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

கிருஷ்ணசாமி தாவா சொத்தை வாங்கும் போது வாதிகளாகிய நாங்கள் அனைவரும் எங்களுடைய பெயரிலும் சேர்த்து வாங்கும்படி சொல்லியும் அதற்கான தொகையையும் பின்னிட்டு தருவதாக கூறி உறுதிமொழி ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் அதுபோன்று ஏதும் ஏற்படுத்தவில்லை. உறுதிமொழியின் பேரில் நாங்கள் தனித்தனியாக தொகை கொடுத்து கிரயம் ஏதும் செய்து கொள்ளவில்லை என்றால் உறுதிமொழியே நாங்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. கிருஷ்ணசாமி 2004 ஆம் ஆண்டு வரை உயிரோடு இருந்த காலகட்டத்தில் தாவா சொத்து குறித்து நாங்கள் எவ்வித கேள்வியும் உரிமையும் அனுபவத்தையும் குறித்து கேட்கவில்லை என்றால் சரியல்ல. மாடர்ன் ரைஸ்மில் கட்டுவதற்கு கோயம்புத்தூரில் உள்ள Licenced Building Surveyor அனுமதி பெற்ற விபரம் தெரியாது என்றால் தெரியும் அனுமதியே நாச்சிமுத்து கவுண்டர் & சன்ஸ் என்னுதான் வழங்கினார்கள். அவ்வாறு வழங்கிய சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி பெயரில் தனித்து வாங்கியது என்றால் சரியல்ல.

கிருஷ்ணசாமி தனிப்பட்ட சொத்து என்பதால் தான் அவர் மொத்த சொத்திற்கும் மதில் சுவர் கட்டி சொந்த அனுபவத்தில் தொடர்ந்து யாருடைய இடையூரும் இன்றி அனுபவித்து வந்தார் என்றால் ரைஸ்மில்லில் இருந்து வந்த பொது வருமானத்தில் தான் மதில் சுவர் கட்டப்பட்டது. நான் அவ்வாறு சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. ஒரு நாச்சம்மாள் என்பவர்தான் கிருஷ்ணசாமிக்கு

வாரிசு என்று அசல் வழக்கு எண் 800/2008 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கில் நானும் ஒரு வாதி என்றும் வழக்கிற்காக நான் தாக்கல்செய்யவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.470/2006 வழக்கில் மாரியம்மாள் மற்றும் அவரது பிள்ளைகள் வாரிசுகள் என்று நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தானது கிருஷ்ணசாமி வாரிசுகளுக்கு சென்றடைய கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் நாச்சம்மாள் என்பவரை வைத்து வழக்கு தொடுத்து சொத்தை அபகரிக்க முயற்சி செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நாச்சம்மாளிடம் இருந்து சொத்தில் உரிமை கோரக்கூடாது என்று உரிமையே இல்லாத நபரிடம் இருந்து எழுதி வாங்கிக் கொண்டோம் என்றால் அதைப்பற்றி எனக்குத்தெரியாது. தாவா சொத்தில் 5/4 பாகம் கேட்க அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கிருஷ்ணசாமி இறந்ததற்கு பின்னிட்டு இதுநாள் வரை 5ம் பிரதிவாதியான நான்தான் சுவாதீனத்திலும் அனுவபத்திலும் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

கிருஷ்ணசாமி கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டுதான் தாவா சொத்தின் பேரில் பட்டா மாறுதலுக்கு நான் மனு கொடுத்தேன் என்றால் வழக்கு தொடுப்பதற்காக பட்டா கேட்டார்கள் அதற்காக நான் மனு கொடுத்தேன். நான் சுவாதீனத்தில் இருப்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குறித்து உரிமைகோரி யாரை வைத்தும் எப்பொழும் பஞ்சாயத்து பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கிருஷ்ணசாமி அவரது சொந்த உழைப்பில் அவரது பெயரில் வாங்கியதால்தான் ஆவணங்கள் அனைத்தும் அவர் வசம் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்த ஆவணங்களை எந்த காலத்திலும் பஞ்சாயத்தாரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் பஞ்சாயத்தார் அந்த ஆவணங்களை கிருஷ்ணசாமியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தபோது நான் எவ்வித கேள்வியும் சுவாதீனத்தைக் குறித்தோ அனுவத்தைக் குறித்தோ கேட்கவில்லை என்று

சொன்னால் நாங்கள் அனைவருமே தாவா சொத்தில்தான் இருந்தோம். 3ம் வாதி தாவா சொத்தை கிரயம் வாங்கியதற்கு வருமான வரித்துறையிடம் இருந்து அனுமதி பெற்றுள்ளாரா என்றால் பெற்றுள்ளார். 2 முதல் 7 பிரதிவாதிகள் 2004 ஆம் ஆண்டுக்கு பிறகும் தன்னிச்சையாக தாவா சொத்தில் வசித்து கட்டுமான பணிகள் மேற்கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு நபர்களிடம் கடன் பெற்று கடனை திரும்ப அடைக்க முடியாத சூழ்நிலையில் நான் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கடன்களை கிருஷ்ணசாமியும் 2 ம் பிரதிவாதியான மாரியம்மாளும் தான் அடைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் எனக்கோ மற்ற வாதிகளுக்கோ நிதி ஆதாரம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவாவை தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு வழக்கு மூலமே எழவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணசாமி தனியாக தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வந்ததால்தான் கடந்த 25.08.2004 ஆம் தேதியன்று 5 ம் பிரதிவாதியான என் பெயரில் ஒரு உயில் சாசனம் எழுதிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 2010 ஆம் ஆண்டு வரை தாவா சொத்திற்கான கிரயஆவணம் இருப்பதே எனக்கு தெரியாது என்றும் வழக்கு போடுவதற்காக நகல் எடுத்து பார்த்தபோதுதான் தெரியும் என்றால் 1981 ஆம் ஆண்டு கிரயம் பெற்றபோதே தெரியும். நான் அவ்வாறு சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

எந்த விதத்திலும் தாவா சொத்து வாதிகாளகிய எங்களுக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் கிருஷ்ணசாமி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் 40 ஆண்டுகளாக முன் அனுபவ பாத்தியதை பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கானது பொய் வழக்கு என்றும் அது தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் ஆகிய எங்களுக்கு எவ்வித உரிமையும், கூட்டு சுவாதினமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**(மேற்கண்ட குறுக்குவிசாரணையை 2 மற்றும் 6,7 பிரதிவாதிகள் அவ்வாறே ஏற்றுக்கொள்கிறார்கள்)**

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி